குதிரையேற்றம் என்பது ரேஸ் க்ளப்—குதிரை ஏற்ற பயிற்சி கழகத்தினால் கொடுக்கப்படுகிறது. ஐம்பது, அறுபது பேர்கள் பயிற்சி பெற்றும் வருகிறார்கள். இராணுவத்தின் மூலமாக ஓரளவு வில்வித்தையும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. இவற்றை தனியே அரசாங்கத்தின் சார்பில் கற்றுக்கொடுக்கிற முயற்சி எதும் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

### மாயூரம் வட்டத்தில் மனுநீதித் திட்டம்.

*553 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) 1972-73-ல் மாயூரம் தாலூகாவில் மனுநீதித் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் எவ்வளவு?

(இ) அவைகளுள் தீர்வு காணப்பட்டவை எத்தனை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா: (அ) 112.

(இ) 108.

திரு. என். கிட்டப்பா: இம்மாதிரி மனுநீதித் திட்டம் செயல் படுத்துகின்றபோது அந்த அந்த வட்டார சட்ட மன்ற உறுப்பினர், பாராளுமன்ற உறுப்பினர் யாரும் அழைக்கப்படுவதில்லை. குறிப்பாக எனது பகுதியில் அழைக்கப்படுவதில்லை. அப்படியின்றி இனிமேல் அந்த அந்தப் பகுதி சட்டமன்ற உறுப்பினருக்கும், பாராளுமன்ற உறுப்பினருக்கும் தெரிவித்து, அவர்களையும் அழைத்து வைத்துக்கொண்டு இந்த மனுநீதித் திட்டம் செயல் படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படிச் செய்வதில் அரசாங்கத்திற்கு ஆட்சேபனை கிடையாது. இதுபற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அறிவிக்கப்படும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இந்த மனுநீதித் திட்டத்தினால் எவ்விதப் பயனும் இல்லையென்ற காரணத்தினால் இதை அரசாங்கம் கைவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

*1973 டிசம்பர் 1]*

***மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா :*** மனுநீதித் திட்டம் நல்ல பயனைத் தந்திருக்கிறது. அதற்கான புள்ளிவிவரங்களே இருக்கின்றன.

| | |
|---|---|
| Number of petitions received during 1972–73 ... | 112 |
| Favourable orders passed ... ... ... | 12 |
| On the Spot ... ... ... ... ... | 10 |
| Subsequent ... ... ... ... ... | 10 |
| Rejected ... ... ... ... ... | 2 |
| Forwarded to other departments ... ... ... | 94 |
| Pending ... ... ... ... ... | 4 |

இப்படி கொடுக்கப்பட்ட மனுக்களுக்கு பரிகாரம் காணப்பட்டிருக்கிறது. எல்லா மாவட்டங்களுக்கும் இதைத் தீவிரமாகச் செயல்படுத்தவேண்டுமென்றே சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டும் வருகிறார்கள்.

### வேதாரண்யம் பெயர் மாற்றம்

***554 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேதாரண்யம் என்னும் பெயரை அதன் பண்டைய தமிழ்ப் பெயரான ‘திருமறைக்காடு’ என்று மாற்றி அமைத்திட அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** இல்லை.

*[முற்பகல் 10-00]*

**திரு. என். கிட்டப்பா :** தலைவர் அவர்களே, இந்த வேதாரண்யம் என்ற பெயர், இதற்கு முன்னாலே திருமறைக்காடு என்று தமிழ்ப் பெயராலே வழங்கப்பட்டு, இப்பொழுது இந்தப் பெயர் வந்ததாகத் தெரிய வருகிறது. இந்த மன்றத்தில் பல தடவை கேட்டுக் கொண்டதற்கிணங்க, மயிலாடுதுறை என்று சிறப்பாகக் கூறப்பட்ட பெயர்தான் இன்றைய மாயூரத்திற்கு. தமிழ் இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள பெயரையே பண்டைய தமிழ்ச் சொல்லாலே

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS